முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.241/2022

25.10.2024 வா.சா.1 திரு. மணிகண்டன்

1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1ம் பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர் போக எனக்கு எத்தனை சகோதர சகோதரிகள் உள்ளார்கள் என்றால் என்னை சேர்த்து நாங்கள் 4 பேர், 1) ஸ்ரீனிவாசன், 2) அமுதா, 3)ராஜலெட்சுமி, 4) மணிகண்டன் (நான்)
2. தாவா சொத்து எனது தந்தை எழுதி கொடுத்த உயில் மூலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிராதில் காட்டப்பட்டுள்ள 3 அயிட்ட சொத்தையும் சேர்த்து சுமார் 3.1/2 சென்ட் இருக்கும் என்றால் சரிதான். இந்த தாவா சொத்து 28.05.2013 தேதியிட்ட உயில் ஆவணத்தின் 2 வது தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
3. உயிலில் 1ம் அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தின் விஸ்தீரணம் சுமார் 4 சென்ட் இருக்கும் என்றால் நினைவில்லை. உயிலின் 1ம் தபசில் சொத்து எங்கள் 4 பேருக்குமே சேர்த்து கூட்டாக எழுதி கொடுக்கப்பட்ட சொத்து தான் என்றால் சரிதான்.
4. உயில் 2ம் தபசில் சொத்து எனக்கு மட்டும் தனித்து எழுதப்பட்டுள்ளது. உயிலில் சாட்சி கையெழுத்து செய்தவர்கள் யார் என்றால் முதலாவது சாட்சி சங்கரநாராயணன், தந்தையின் நண்பர், இரண்டாவது ராமமூர்த்தி அவர் எனது மூத்த சகோதரியின் கணவர்.
5. மேற்படி உயிலை யார் தயார் செய்தார் என்றால் எனது தந்தை தயார் செய்தார். மேற்படி உயில் ஆவணம் எங்கு பதிவு செய்யப்பட்டது என்றால் திருநெல்வேலி சார் பதிவாளர் அலுவலகத்தில். மேற்படி உயிலின் அசல் என்னிடம் தான் உள்ளது. அதன் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலின் அசலை தாக்கல் செய்யாததற்கு காரணம் எதாவது உள்ளதா என்றால் அது தொலைந்து

விடக்கூடாது என்பதற்காக தாக்கல் செய்யவில்லை.

6. உயில் ஆவணத்தின் பக்கம் 2ல், எனக்கும், எனது மனைவிக்கும் வேண்டிய சகல உதவி ஒத்தாசைகளை மேற்படி எனது மக்கள் செய்து வருகிறார்கள் என்று உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை உயில் எழுதிய சமயத்தில் எனது தந்தையை அனைவரும் நல்ல முறையில் கவனித்து வருவதாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.
7. வா.சா.ஆ–3 உயில் எழுதவதற்கு முன்பே எனது தந்தை வேறு ஒரு உயிலை எழுதி வைத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த உயிலில் எனது தந்தை அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனைத்து வாரிசுகளுக்கும் சரி சமமாக எழுதி வைத்திருந்தார் என்றால் சரியல்ல.
8. வா.சா.ஆ.3ல் காட்டப்பட்டுள்ள அனைத்து சொத்துக்களும் வீடு என்றால் முன்பு அதில் வீடும் இடமும் இருந்தது, எனது தந்தையும், சித்தப்பாவும் பிரித்து கொண்டதில் தற்போது வீடு மட்டும் தான் உள்ளது. நான் பெங்களூரில் கடந்த 14 ஆண்டுகளாக வேலை செய்கிறேன்.
9. அதற்கு முன்பு நான் திருநெல்வேலியில் குடியிருந்தேன் என்றால் சென்னையில் 4 வருடம் வேலை செய்தேன். 1ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி தனியாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது சகோதரிகளும் திருமணம் ஆகி தனியாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.
10. வா.சா.ஆ 3ஐ எனது தந்தை ஏற்படுத்தி கொடுத்ததாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை வா.சா.ஆ.3ஐ ஏற்படுத்தியிருந்தார் அவரது 4 பிள்ளைகளுக்கும் சொத்தை சரிசமமாக பிரித்து கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல, பெண்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்துவிட்டார், 1ம் பிரதிவாதிக்கு ஒரு இடம்

கொடுத்துவிட்டார் அதை இந்த உயிலில் காட்டவில்லை.

11. 1ம் பிரதிவாதிக்கும், எனது சகோதரிகளுக்கும் எனது தந்தை வேண்டியதை செய்துவிட்டார் என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 எனது தந்தையின் இசைவின்றி மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த ஆவணத்தின் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாதுகாப்பு கருதி தான் தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம்.,

12. எனது தந்தை 29.04.2022ல் காலம் சென்றுவிட்டார். வா.சா.ஆ–7ல் கண்ட விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு மூத்த மகன் என்ற அடிப்படையில் 1ம் பிரதிவாதி செய்ய வேண்டிய கடமைகளை செய்யவிடாமல் நான் தடுத்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால்சரியல்ல. வா.சா.ஆ.7 முதல் 10 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–9 ஆவணத்தில் யாருக்கு அளிக்கப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் மேற்படி புகாரை இ–மெயில் மூலம் அனுப்பினேன். இ–மெயிலில் அனுப்பியதை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி புகார் இணையதளம் வழியாக காட்டக்கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ.10 ஆனது 4ம் பிரதிவாதியால் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது தொடர்பாக என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் அளித்த புகாரின் பெயரிலும் பிரதிவாதிகளை காவல்துறையினர் விசாரித்தனர். நான் அளித்ததாக கூறும் புகார்கள் பொய் என்பதால் தான் காவல்துறையினர்

அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிராதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.